செ.கு.எண் : 103 நாள் : 14.08.2011

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 14.8.2011

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து கீழ்பவானி திட்ட பிரதானக் கால்வாய் மற்றும் நீட்டிப்பு கால்வாய் இரட்டைப்படை மதகுகள் மூலமாகவும், சென்னசமுத்திரம் பகிர்மான வாய்க்காலில் ஒற்றைப்படை மதகுகள் மூலமாகவும், நன்செய் பயிர் சாகுபடிக்காக தண்ணீர் திறந்துவிடக் கோரி, ஈரோடு மாவட்ட வேளாண் பெருங்குடிமக்களிடமிருந்து எனக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருங்குடிமக்களின் வேண்டுகோளினை ஏற்று, கீழ்பவானி திட்ட பிரதானக் கால்வாய் மற்றும் நீட்டிப்பு கால்வாய் இரட்டைப்படை மதகுகள் மூலமாகவும், சென்னசமுத்திரம் பகிர்மான வாய்க்காலில் ஒற்றைப்படை மதகுகள் மூலமாகவும், **நன்செய் பயிர் சாகுபடிக்காக 15.8.2011 முதல்** தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், ஈரோடு, திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள சுமார் **1,03,500 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

*வெளியீடு, இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.*